# ஹட்டன் - திக்ஓயா நகர சபை
## நுவரெலியா மாவட்டம்

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 20 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஜூன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து ஹட்டன் - திக்ஓயா நகர சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய நானாவித வைப்புக்கள் மீதி ரூபா 10,935,097 ஆக இருந்த போதிலும், வைப்பு பதிவேடுகளின் படி, அம் மீதி ரூபா 8,272,691 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 2,662,406 தொகையான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய பெறவேண்டியிருந்த 4 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,086,415 தொகையாக இருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 9 ஆண்டுகள் வரையான செலுத்த வேண்டியிருந்த 4 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 258,245 தொகையாகக் காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 28,223,519 தொகை பெறுமதியான 5 கணக்கு விடயங்கள் விபரமான பட்டோலைகள், கணிப்பீட்டு சபை அறிக்கை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) நகரசபைச் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் (255 ஆம் அதிகாரம்) 36 (உ)(ii) பிரிவு | அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் சபைக்குரிய 1 ரூட் பேர்ச் 39.14 ஆன 7 காணித் துண்டுகள் 7 நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 — 2009 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியில் 53 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,697,317 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,050,988 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 27,911,167 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 19,139,821 தொகையினால் முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------------------------

நிதி விளைவுகளில் ரூபா 19,139,821 ஆன முன்னேற்றத்திற்கு 5 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 2 செலவின விடயங்களில் குறைவும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------------

நடைமுறைச் சொத்துக்களுடன் நடைமுறைப் பொறுப்புக்களை ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 4:1 எனக் காணப்பட்டது. அவ்வாறே ரூபா 92,195,549 ஆன நடைமுறைச் சொத்துக்களில் 39 சதவீதம் அதாவது ரூபா 36,780,132 தொகை காசு மீதியாக இருந்ததுடன், ரூபா 20,200,758 ஆன நடைமுறைப் பொறுப்புக்களில் 71 சதவீதம் ரூபா 14,466,331 தொகை மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்களாக இருந்தன. இந்த மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களில் 82 சதவீதம் அதாவது ரூா 11,949,689 மாத்திரம் உடனடியாக மீளச்செலுத்த வேண்டிவை அல்லாத இருப்பதால் மிகவும் சாதகமாக மிகை நிதியொன்றாக முதலீடு செய்ய முடியுமென அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

-----------------------------------

(அ) சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானம் தொடர்பான தகவல்களின் பிரகாரம் ரூபா 6,070,136 ஆன நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 9 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலப் பகுதிக்காக 9 இறைச்சிக் கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 548,138 ஆன வாடகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் இறைச்சிக் கடையொன்றை 2015 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நபரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 433,346 ஆன நிலுவை வாடகையை மீளாய்வாண்டில் அவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குரிய திக்ஓயா விழா மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 295,253 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சபைக்குரிய 3 காணித் துண்டுகள் மதிப்பீட்டு வாடகையை விட குறைந்த வாடகையில் குத்தகைக்கு வழங்கிய காரணத்தினால் ரூபா 414,660 ஆன குத்தகை வாடகை வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

## 2.5 மிகை விதிப்புக்கள்

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 182(1) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 10,894 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்து அம்மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீதவரி திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் இறுதியாக வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்படாமல் 2006 ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது வரி அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் கணக்கிடப்படவில்லை.

(ஆ) சபைக்குரிய 27.14 பேர்ச் அளவிலான 3 துண்டுக் காணிக்கான வாடகையை உரிய காலத்தில் மதிப்பீடு செய்து குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த 49 செயற்திட்டங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் விளைவற்றும் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டும் காணப்பட்டன.

| | சொத்து வகை | பெறுமதி<br>ரூபா | பயன்படுத்தப்படாத காலப்பகுதி |
|---|---|---|---|
| i. | 05 ஜுகி இயந்திரங்கள் | 150,000 | 05 ஆண்டுகள் |
| ii. | 05 ஜுகி இயந்திர மோட்டார்கள் | 175,000 | 05 ஆண்டுகள் |
| iii. | மஹேந்திரா ஜீப் வண்டி | 1,300,000 | 03 ஆண்டுகள் |
| iv. | சவ ஊர்தி | 8,500 | 04 ஆண்டுகள் |
| v. | வீதி பதப்படுத்தும் இயந்திரம் | 1,000,000 | 10 ஆண்டுகள் |
| | | 2,633,500 | |

## 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வெளியேற்றப்படுவதை முறைப்படுத்தும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன், நகரின் அநேக பிரதேசங்களில் முறையற்ற விதத்தில் திண்மக் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக செயற்திட்டமொன்றுக்காக சுற்றாடல் கணிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு ரூபா 40,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண சபையினதும் நகர சபையினதும் நிதிப் பங்களிப்புடன் ரூபா 686,256 பெறுமதியான 100 பிளாஸ்ரிக் கொம்போஸ்ட் தொட்டிகளும் 100 கொங்கிரீட் கொம்போஸ்ட் தொட்டிகளும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 32,963 பெறுமதியான 9 பிளாஸ்ரிக் தொட்டிகள் மற்றும் ரூபா 278,400 பெறுமதியான 87 கொங்கிரீட் கொம்போஸ்ட் தொட்டிகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 4 வருமான விடயங்களில் 22 சதவீதம் முதல் 170 சதவீதம் வரையும் 5 செலவு விடயங்களில் 16 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட சபை நிதியத்தினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துக் காணப்பட்ட ரூபா 2,050,000 ஆன 06 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | வெவ்வேறு தரப்பினரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் வெவ்வேறு தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்களை கையகற்றி சபைக்கு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அச்சொத்துக்களை சபையிலே வைத்திருந்தமை. |
| (ஈ) | கணக்கீடு | மீளச்செலுத்த வேண்டிய நானாவித வைப்புக்கள் கணக்கிலும் வைப்புப் பதிவேட்டின் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டமை. |